# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 15 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 11

## அற்றைத்திங்கள்

1. அற்றைத் திங்கள் நாடகத்தின் ஆசிரியர் யார்?

2. “அற்றைத்திங்கள் அவ்வெண்நிலவில்…” பாடலைப் பாடியவர்கள் யாவர்?

3. இப் பாடல் இடம் பெற்றுள்ள இலக்கியம், நூல் எது?

4. இப் பாடல் இடம்பெற்றுள்ள திணை மற்றும் துறை என்பவற்றை குறிப்பிடுக?

5. அற்றைத் திங்கள் என்பது குறிக்கும் பொருள் யாது?

6. இங்கு குன்று எனப்படும் மலையின் பெயர் யாது?

7. எந்தை எனன்றால் என்ன?

8. தந்தை கட்டிய கூடு புறாக் குஞ்சுகளைப் போல வளர்த்தார்..

    அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

    ஆ. புறாக் குஞ்சுகளைப் போல வளர்த்தார் எனும் வரி உணர்த்தும் கருத்து?

9. **பறம்பு மலை மக்களின் அன்பை எப்படி விட்டுச் செல்வது
   குறவர்கள்,. கானவர்கள் .. எயினர்கள்…**

    அ.இக் கூற்று யாரால் மொழியப்பட்டது?

    ஆ. கானவர் எனப்படுவோர் யாவர்?

10. **என் அருமைச் செல்வங்களே புறப்பட வேண்டியது தான்..**

    அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

    ஆ. இங்கு செல்வங்கள் என விளிக்கப்பட்டவர்கள்?

11. **தாலாட்டில் அசைந்திருந்த தொட்டில் வரை இரத்த வெள்ளம்
    பால் வார்த்த நிலா முகத்தில் பற்றிவிட்ட தீப்பந்தம்..**

    அ. தாலாட்டில் அசைந்திருந்த தொட்டில் வரை இரத்த வெள்ளம் எனும் அடிகளால் யாது உணர்த்தப்படுகின்றது?

    ஆ.நிலா முகம் என்பதில் வெளிப்படும் அணி யாது?

12. மூவேந்தர் பறம்பு மலை மீது போர் தொடுக்க காரணம் யாது?

13. **“ஏலம்பூ வாய் பொசுங்க எரியுறுது தீக்கொழுந்து**
**காலப்புனல் கனக்கும் கண்ணீரையும் சுமந்து”**

**அ.** இதில் இடம்பெற்றுள்ள அணியினை தருக.

ஆ. “ஏலம்பூ வாய்” என்பதால் விளக்கப்படுவது யாது?

14. இந் நாடகத்தில், போருக்கு பின் பறம்பு மலையின் நிலையினை தெளிவுறுத்துக?

15. அற்றைத் திங்கள்நாடகத்தில், புலம்பெயர்வின் வலி நாட்டை விட்டு பிரிய மறுக்கும் அங்கவை சங்கவை ஊடாக எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது.

16. அற்றைத் திங்கள் நாடகத்தில், போரின் கொடுமை மற்றும் போரின் பின்னரான பறம்பு மலையின் நிலை என்பன பற்றி எடுத்துரைக்க.?

17. பறம்பு மலை மக்களின் வாழ்வியல் அம்சங்கள் இந்நாடகத்தில் எவ்வாறு வெளிப்படுத்தப் படுகின்றது.

18. பறம்பு மலையின் இயற்கை அழகு எவ்வாறு எடுத்து கூறப்படுகின்றது.

19. கபிலரின் குணப்பண்புகளை குறிப்பிடுக

20. நாடக ஆசிரியரின் படைப்பாற்றல் எவ்வாறு புலப்படுகின்றது.